கலைமாமணி
தமிழ்மறைக்காவலர்

# திருக்குறளார் வீ. முனிசாமி

அவர்களின்

# தொண்டு விளக்கம்



இயக்குநர், திருக்குறள் நெறி பரப்பும் மையம்
தமிழ்நாடு அரசு
வள்ளுவர் கோட்டம்

பவள விழாவின்போது விழாக் குழுவினரால்
வெளியிடப் பெற்றது

இடம் : இராஜேஸ்வரி கல்யாண மண்டபம்
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை சென்னை-4

29-9-88 வியாழக்கிழமை

கலைமாமணி - தமிழ்மறைக்காவலர்

# திருக்குறளார் பவள விழா
# பொதுத்தொண்டுப் பொன்விழா

*அமைப்பாளர்கள்*

*தலைவர்*

**கொடை வள்ளல் திருமிகு எம். ஏ. எம். இராமசாமி**

*துணைத் தலைவர்கள்*

**மாண்புமிகு நீதிபதி பி. வேணுகோபால்**
**மாண்புமிகு நீதிபதி மோகன்**
**மாண்புமிகு நீதிபதி பாஸ்கரன்**
**டாக்டர் வெங்கடசுப்பிரமணியம்**
**டாக்டர் எஸ். முத்துக்குமரன்**
**டாக்டர் எஸ். வி. சிட்டிபாபு**

*பொருளாளர்*

**டாக்டர் ஜி. உமாபதி**

*பொதுச் செயலாளர்*

**இரா. முத்துக்குமாரசாமி**

*இணைச் செயலாளர்கள்*

**பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன்**
**இலக்கியச்சுடர் மூவேந்தர் முத்கு**
**அகராதி அறிஞர் ந. கைலாசம்**
**'வள்ளுவர் வழி' கண்ணன்**
**மு. திரவியம்** தொகுத்தவர் :

பொதுக்குழு உறுப்பினர்கள்

வள்ளல் நா. மகாலிங்கம்
ஆர். கோபால்
ஓ. ஏ. கனகசபை
தெய்வசிகாமணி
டாக்டர் தவமணி
டாக்டர் டோம்னிக் சாமிநாதன்
மயிலை குப்புசாமி முதலியார்
வானதி திருநாவுக்கரசு
சௌந்தரா கைலாசம்
கோ. செல்வம்
டாக்டர் ஔவை நடராசன்
சிலம்பொலி செல்லப்பன்
டாக்டர் சி. பாலசுப்பிரமணியம்
அ. நடராசன்
டாக்டர் விக்கிரமன்
குமரி ஆனந்தன்
ஏர்வாடி இராதாகிருஷ்ணன்
பேரா நாராயணசாமி
வி. செ. கந்தசாமி

# பவள விழாவும்
# பொன் விழாவும்

கடந்த ஐம்பது ஆண்டுகட்கு மேலாகத் தமிழக மெங்கணும் சென்று - கடல் கடந்து தமிழர்கள் வாழும் நாடுகட்கெல்லாம் சென்று பொய்யாமொழிப் புலவராம் வள்ளுவப் பெருமானின் வாக்குப் பெருமையைத் தம் சொல்லாற்றாலும் நகைச்சுவைத் திறத்தாலும் கற்றாரையும் கல்லாதவரையும் களிப்படையச் செய்யும் வண்ணம் திருக்குறள் தொண்டாற்றிவரும் கலைமாமணி, தமிழ் மறைக்காவலர் திருக்குறளார் வீ. முனிசாமி அவர்களின் 75-ஆவது ஆண்டு நிறைவான பவளவிழாவும் பொதுத் தொண்டுப் பொன்விழாவும் தமிழகத்தின் தலைநகரில் அறிஞர் பெருமக்களாலும் அருஞ்செல்வர்களாலும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெறும்.

விழா எல்லாவகைச் சிறப்புகளுடன் நடைபெறுதற்காகச் சுவையான பல நிகழ்ச்சிகள் இணைக்கப் பெற்றுள்ளன.

குறளின் பெருமையை எடுத்துக் கூறும் கருத்தரங்கம், கலைமாமணி சுப்பு ஆறுமுகம் அவர்களின் வில்லிசை நிகழ்ச்சி, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் இன்னிசைப் பேருரை, தமிழக ஆளுநர் அவர்களும் ஆலோசகரும் துணைவேந்தர்களும் அரசுத்துறைச் செயலர்களும் தலைவர்களும் அறிஞர்களும் கலந்து கொள்ளும் பாராட்டுவிழா முதலியன இடம்பெறும்,

திருக்குறளார் ஐயா அவர்கட்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கப் பெறும்.

ஐயா அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையிலும் அலங்கார ஊர்வலம் மயிலை திருவள்ளுவர் கோயிலிலிருந்து புறப்பட்டு மண்டபத்திற்கு வந்து சேரும். ஊர்வலத்தில் தமிழன்பர்கள், சாரணர்கள் புடைசூழ ஐயா அவர்கள் அணித்தேரில் அழைத்து வரப்படுகிறார்கள்.

தமிழ் மறைக்கு வாழ்நாள் முழுவதும் அருந்தொண்டாற்றி வரும் ஒப்பற்ற தொண்டரைத் தமிழர்கள் அனைவரும் வாழ்த்திப் பாராட்டவேண்டியது சீரிய கடமை என்று நினைவுபடுத்துகிறோம்.

தமிழுக்காகவும் திருக்குறளுக்காகவும் ஐம்பதாண்டுகட்கு மேலாக அருந்தொண்டாற்றி வரும் தமிழ் மறைக் காவலர் கலைமாமணி திருக்குறளார் அவர்களுக்குத் நம்மாலியன்ற ஆதரவளித்துப் பெருமைப் படுத்த வேண்டியது தமிழராகிய நம் அனைவருடைய தலையாய கடமையாகும்.

விழாவிலும் ஊர்வலத்திலும் தமிழன்பர்களும் திருக்குறள் மன்றங்களும் குறள் தொண்டர்களும் பெருந்திரளாக வந்திருந்து அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஐயா அவர்களைச் சிறப்பிக்க விரும்பும் மன்றங்களும் ஆன்றோர்களும் முன்னதாக விழாவுக்குத் தெரிவித்து ஒப்புதல் பெற வேண்டுகிறோம்.

**விழாக்குழுவினர்**

## திருக்குறளைப் பற்றிப் பாராட்டிய வாழ்த்துப் பாக்கள்

### 1. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்

''குறட் பயன் கொள்ள நம் **திருக்குறள் முனிசாமி சொல்**
கொள்வது போதுமே''

### 2. கிருபானந்தவாரி சுவாமிகள் பாராட்டிப் பாடிய பாடல்

**நேரிசை வெண்பா**

திருக்குறளார் என்னுமுயர் செய்ய முனிசாமி
மருக்குலவும் வேலனருள் மன்னி—பெருமை
பவளவிழாக் கொண்டுயர்ந்து பல்லாண்டு வாழி
தவளமலை போலே தழைத்து.

அன்பன்

**கிருபானந்தவாரி**

# திருக்குறளாரின் தனிச் சிறப்புகள்

1. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பேயே—1935-ம் ஆண்டி லிருந்தே—திருக்குறள் பணியினைத் தொடங்கி யாரும் இதுவரை கண்டிராத முறையில் திருக்குறளைப் பட்டி, தொட்டிகளெல்லாம் பாமரமக்களும் எளிய முறையில் புரிந்து, அறிந்து பின்பற்றுமாறு செய்து வெற்றிகண்ட முதல் தொண்டர்.

2. எளிய மக்களும் இனிமையாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் மேடைகளில் நயமாகவும், கவர்ச்சியாகவும், அத்துடன் நகைச்சுவை கலந்தும் புதிய முறையில் குறட் பாக்களை விளக்கிக் கூறியவர். பொதுமக்களிடையே அவர்களுக்கு ஏற்றவாறு குறட்பாக்களைச் சொல்லுகின்ற பணியினை திருக்குறளாருக்கு முன்பு யாரும் செய்ய முயற்சிக்கவில்லை. அந்தச் சிறப்பான பணிக்கு மூலவர் திருக்குறளாரேயாவார்.

3. உலகப் பொதுமறையாகிய திருக்குறளில் அடங்கிய 1330 அரும்பெரும் குறட்பாக்களையும் மிகச் சிறப்பான முறை யில் கருத்துரை, பொழிப்புரையுடன் விரிவாகவும் நுட்ப மான விளக்கங்களோடும் 1200 பக்கங்களுக்கும் அதிகம் கொண்ட இதுவரை வெளி வந்திராத முறையில் சிறந்த விளக்கம் கொடுத்து ஒரு நூலாக 'உலகப் பொதுமறை திருக்குறள் உரைவிளக்கம்'' என்ற நற்பெயரில் முன்னாள் தமிழக முதல்வர், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் பாராட்டப் பட்டு வெளியிட்டிருப்பது தனிப் பெருஞ் சிறப்பு. இதன் மூலம் அவரது ஐம்பது ஆண்டு காலத் திருக்குறள் ஆழமான ஆராய்ச்சியின் பலனை தமிழ் மக்களுக்குப், பெரும் புதையலாகக் கொடுத்திருப்பதற்கு அன்னாருக்கு தமிழ் மக்கள் என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

4. திருக்குறள் கடினமான நூல் என்றும், அது புரியாது என்றும் யாரும் நினைக்க வேண்டாம். திருக்குறளார் பேச்சைக் கேட்டால் தமிழில் தேர்ச்சி பெற்றிராதவர்கள் கூடத் திருக்குறளை எளிதில் புரிந்துகொண்டு இன்புற முடியும். அது மட்டுமன்று. புரிந்து கொள்கிறவர்கள் அதனுடன் நின்று விடாமல் திருக்குறளைத் தங்கள்

அன்றாட வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க விரும்பும் அளவுக்கு அதனை எளிதாக்கித் தெளிவுபடுத்தி உள்ளத்தில் பதிய வைக்கும் தனித் திறமை படைத்தவர் திருக்குறளார்.

5. திருக்குறளாருக்கு உவமை திருக்குறளாரேயாவர்.

6. ஒரு நூலுக்காக—அதாவது திருவள்ளுவரின் திருக்குறள்—ஆகிய ஒரே நூலுக்காக அரசு ஒரு நிர்வாகத் துறையையே அதாவது ''திருக்குறள் நெறிபரப்பும் மையம்'' என்ற நிறுவனத்தையே ஏற்படுத்தக் காரணம் பெருமை திருக்குறளாரைச் சாரும். உலகத்தில் வேறு எந்த நாட்டிலும், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அரசு ஒரு நூலின் நெறியைப் பரப்ப அரசுத்துறை ஒன்றை அமைத்து இயக்கி வருவது கிடையாது.

7. ''ஏ மனிதனே, சிரித்து மகிழ்வதோடு நின்று விடாமல் சிந்திக்கவும் மறக்கவேண்டாம்'' என்பது அவரது மந்திரச் சொற்கள்.

8. எல்லா மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகளிலும், கல்லூரி களிலும் திருக்குறள் பற்றி எண்ணிலடங்கா சொற்பொழி வாற்றியவர் திருக்குறளார் ஒருவரே என்றால் மிகை யாகாது.

9. வழக்கறிஞர் தொழிலுக்குப் படித்திருந்தும் கூட அந்தத் தொழிலை மேற்.கொள்ளாமல் தமிழ்த்தொண்டு, திருக்குறள் தொண்டு ஆகியவற்றையே செய்து தனது வாழ்க்கையை முழுக்க முழுக்க திருக்குறளுக்கு அர்ப்பணித்த அறிஞர்.

10. மிகப் படித்த வித்துவான்கள், புலவர்கள், தமிழ் மேதைகள் கைகளில் மட்டுமே இருந்த திருக்குறளை அதிகம் படிக்க வாய்ப்பில்லாத பாமரமக்கள் முன்னே கொண்டு தருவதற்கு நகைச்சுவையுடன் புதுமுறையான பேச்சுடன் விளக்கம் தந்து வழிகாட்டியவர்.

11. 50 ஆண்டுகளுக்கு முன்னதாகவே பொதுமேடைகளில் அன்றாட வாழ்க்கைக்குரிய குறட்பாக்களை திருக்குறளார் புதிய முறைகளில் கூறி வழி காட்டிய பிறகுதான் மிகச் சிறந்த மேடைப்பிரசங்கிகளும், சீர்திருத்த மேதைகளும், தமிழ் அறிஞர்களும் பொது மேடைகளில் திருக்குறட்பாக் களை மேற்கோள் காட்டிப் பேசத் தொடங்கினார்கள் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

12. 1935ல் தொடங்கிய இவரது திருக்குறள் பரப்பும் பணி அழுத்தமாகவும், ஆழமாகவும் அதே நேரத்தில் அடுத் தடுத்து விரைவாகவும் செய்யப்பட்டதால், மக்களிடையே திருக்குறள் பற்றினை வேரூன்றச் செய்தது. அதனால் தான் மற்ற தமிழ் நூல்களைப் பற்றி மட்டுமே எழுதிக் கொண்டிருந்த தமிழ்ப்புலமை பெற்ற சான்றோர்கள், பேராசிரியர்கள் எல்லாம் திருக்குறள் சம்பந்தமாகவும் நூல்கள் எழுதி வெளியிட ஆரம்பித்தார்கள்.

13. இன்று தமிழ் மக்கள் உள்ளங்களில் எல்லாம் குறள் மணம் கமழச் செய்வதற்கு முதல் வித்திட்ட தொண்டர். திருக்குறள் விழிப்புணர்ச்சி விரைந்து வளரவும் வித்திட்ட வித்தகருமாவார்.

14. தனிச் சிறப்பு வாய்ந்த சொற்பொழிவுகளை நிகழ்த்தி அனைத்துத் துறைகளைச் சார்ந்த மக்களையும் பாமரர் களையும் முழு மனநிறைவுபடுத்தியவர்.

15. கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மற்றும் நிகழ்ச்சிகளிலும் குறளைப் பற்றிய பேச்சுகளைத் தனியாகப் பேசும் பழக்கத் திற்கு அடிகோலியவர்.

16. இமாலய மலையில் ரிஷிகேசத்தில் முனிவர் தவத்திரு. சிவானந்த மகான் அவர்களின் பக்தர்கள் பெருங்கூட்டத் துடன் இருந்தபோது அந்த நிறுவனத்திற்கு அடிக்கடி சென்று ஐந்து ஆண்டுகளாக 1952-57ல் டெல்லி நாடாளு மன்றத்தில் இருந்த காலம் திருக்குறள் சொற்பொழிவு நடத்தி சிவானந்த சுவாமிகளின் மிகச் சிறந்த பாராட்டுதல் களைப் பெற்று சாதனை புரிந்தவர்.

17. தமிழ் மக்களிடையே திருக்குறன் பரவுவதற்கு ஆரம்பக் காலத்தில் 40க்கு மேற்பட்ட சிறுசிறு புத்தகங்களாக எழுதி வெளியிட்டு பாமரர்களுக்கும் ஏற்ற எளிய விலையில் விநியோகம் செய்தார்.

18. முதன்முதலில் திருக்குறளுக்கென்றே தனிப் பத்திரிகை அதாவது—‘‘குறள்மலர்’’—என்ற மாதப் பத்திரிகையை நடத்திக் குறட்பாக்கள் மணம் கமழச் செய்த பெருமை திருக்குறளாரையே சேரும்.

19. 1952 முதல் 1957 வரையில் டெல்லி பாராளுமன்ற அவை யில் முதல்ம்தலாக திருக்குறள் மேற்கோள்கள் காட்டிப் பேசி தமிழ்மொழியின் சிறப்பை ஓங்கச் செய்தார்.

20. பாரத நாட்டின் வடக்கேயும் பல முக்கிய நகரங்களுக்குச் சென்று குறள் மணம் பரப்பும் பணியினைச் செய்தார்.

21. பல முறை கடல் கடந்து மலேசியா, சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா, ஜோபோ, டெலிகான்சன், சிகாமெட் போன்ற நாடுகளுக்குச் சென்று திருக்குறள் விளக்கத் தொண்டு செய்தார்.

22. கடந்த 50 ஆண்டுகளாகவே சென்னை, திருச்சி, வானொலி மூலம் இனிய வானொலிப் பேச்சுக்கள் மூலம் திருக்குறள் பரப்பிய பெருமையும் திருக்குறளாரையே சாரும்.

23. 1961ல் சிங்கப்பூர் கல்வி அமைச்சர் திரு. ராஜரத்தினம் அவர்கள் மூலம் அங்குள்ள அரசுக்கு "திருக்குறள்" நூலை அளித்துத் தமிழின் பெருமையை எடுத்துக் கூறியவர் திருக்குறளார்.

24. தமிழுலகில் இப்போது '**வழக்காடு மன்றம்**' என்னும் பெயருடன் நடைபெற்று வருகின்ற நிகழ்ச்சியைத் தோற்றுவித்தவர் திருக்குறளாரே யாவார்.

25. ஐம்பத்திரண்டு வாரங்கள்—வாரம் ஒரு முறையாக—திருக்குறள் பேச்சினைத் தாமும், பிற அறிஞர்கள் பெருமக்களுமாக வானொலியில் நிகழ்த்தி குறள் பரப்பியவர்.

26. சென்னை வானொலி நிலையத்தில் நாள்தோறும் காலையில் திருக்குறள் ஒன்றைச் சொல்லிய பிறகு பிற நிகழ்ச்சிகளைத் தொடங்கும் முறைக்குக் காரணமானவர் திருக்குறளார் என்றே கூற வேண்டும்.

27. திருக்குறளை எளிதில் புரிந்து கொள்ள வேண்டுமானால் திருக்குறளாரின் பேச்சைக் கேட்கவேண்டும் என்கிற அளவுக்கு அதனை உள்ளத்தில் பதியவைத்துச் சிந்தனையையும் தூண்டி விடுபவர் திருக்குறளார்.

28. திருக்குறள் என்ற கடலில் பொதிந்துள்ள கருத்துக்களைக் கடைந்தெடுத்து அதில் நிறைந்துள்ள அமிழ்தம் அன்ன கருத்துக்களை நகைச்சுவையுடன் விளக்கிக் கூறும் பேரறிஞர் திருக்குறளார்.

29. திருக்குறளார் சொற்பொழிவுகளில் ஆழம், அகலம், இனிமை, தெளிவு, நகைச்சுவை ஆகிய அனைத்தும் இருக்கின்றன.

30. பொது மேடைகளிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், ஆலய விழாக்களிலும், மகாநாடுகளிலும், பட்டிமன்றங்களிலும், வழக்காடு மன்றங்களிலும், திருமண நிகழ்ச்சிகளிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு இதுவரை திருக்குறளார் பேசிய சொற்பொழிவுகள் எண்ணிலடங்கா என்பது பெருமைக்குரிய செய்தி.

# இயற்றிய நூல்கள்

| வரிசை எண் | நூலின் பெயர் | பதிப்பகத்தின் பெயர் | வருடம் |
|---|---|---|---|
| 1. | வள்ளுவனார் உள்ளம் | திருக்குறள் அச்சகம், கடலூர் | 1949 |
| 2. | திருக்குறள் மூலம் | ,, ,, | ,, |
| 3. | வள்ளுவர் காட்டிய வழி | ,, ,, | ,, |
| 4. | அவள் சிரித்த சிரிப்பு | ,, ,, | ,, |
| 5. | இன்பத்தோட்டம் | ,, ,, | ,, |
| 6. | முருகன் முறையீடு | மீ. ஆ. ராமன் செட்டியார் தென்னூர், திருச்சிராப்பள்ளி | |
| 7. | இன்பம் தரும் இன்பம் | திருக்குறள் அச்சகம், கடலூர் | 1949 |
| 8. | மானத்தை விற்காதே | ,, ,, | ,, |
| 9. | திருக்குறள் இன்பம் | ,, ,, | ,, |
| 10. | இன்பம் இருக்கும் இடம் | ,, ,, | ,, |
| 11. | காதல் கள்வன் | ,, ,, | ,, |
| 12. | தேய்ந்த விரல் | மாணிக்கம் பதிப்பகம், திருச்சி | |
| 13. | மயங்கிய நெஞ்சம் | திருக்குறள் அச்சகம், கடலூர் | ,, |
| 14. | வள்ளுவர் குறளும் | ஈ. வெ. ரா. வாழ்க்கையும் நிலையம் அச்சகம், திருச்சிராப்பள்ளி | 1949 |
| 15. | வள்ளுவரும் பெரியாரும் | செல்வி பதிப்பகம், காரைக்குடி | ,, |
| 16. | திருவள்ளுவரும் திராவிடக் கொள்கையும் | பொன்னி பதிப்பகம் செந்தமிழ் அச்சுக்கூடம் புதுக்கோட்டை | ,, |
| 17. | வடலூரும் ஈரோடும் | ,, ,, | ,, |
| 18. | வள்ளுவர் பூங்கா | மாணிக்கம் பதிப்பகம், திருச்சி | 1949 |
| 19. | காதல் உழவன் | ,, ,, | ,, |
| 20. | திருக்குறள்—காமத்துப்பால் - பொழிப்புரை | திருக்குறள் அச்சகம், கடலூர் | ,, |
| 21. | வள்ளுவரைக் காணோம் | ,, ,, | ,, |
| 22. | வள்ளுவர் பேசினால் | மாணிக்கம் பதிப்பகம், திருச்சி | 1949 |
| 23. | வள்ளுவரும் பரிமேலழகரும் | திருக்குறள் அச்சகம், கடலூர் | ,, |
| 24. | வள்ளுவர் ஏன் எழுதினார்? | ,, ,, | ,, |

25. திருக்குறளில் நகைச்சுவை
சேகர் பதிப்பகம், சென்னை ,,

26. அகமும் முகமும் இலக்கிய மன்றம்.
சைதாப்பேட்டை

27. வள்ளுவர் வகுத்த வாழ்க்கைப் பாதை
திருக்குறள் அச்சகம், கடலூர் ,,

28. வள்ளுவர் வழிப் பயணம்
செல்வி பதிப்பகம், காரைக்குடி ,,

29 ஏன் இந்த வாழ்வு? திருக்குறள் அச்சகம், கடலூர் ,,

30. உலகப் பொது மறை திருக்குறள் உரை விளக்கம்
திருமகள் நிலையம், சென்னை 17
1982

31. திருக்குறளாரின் சிந்தனைகள்
திருமகள் நிலையம், சென்னை
1986

32. திருக்குறள் காமத்துப்பால்
திருக்குறளார் வெளியீடு,
சென்னை 1987

33. திருக்குறளில் நகைச்சுவை
திருக்குறளார் பதிப்பகம்
சென்னை 1987

34. வள்ளுவர் காட்டிய வழி திருக்குறளார் வெளியீடு,
சென்னை ,,

35. வள்ளுவர் காட்டும் வாழ்க்கைப்பாதை
திருக்குறளார் பதிப்பகம்,
சென்னை ,,

36. திருக்குறள் அதிகார விளக்கம்
வானதி பதிப்பகம், சென்னை 1988

தொகுத்தவர்

**திருக்குறளார் தொண்டன்**
**திருக்குறள் நெறித் தோன்றல்**
**மு. திரவியம்** பி. ஏ., டி. எல். எஸ். ஏ. எல்
மாவட்ட வருவாய் அலுவலர் (ஓய்வு)
2, மீர் ஆஷிக் ஹன்சன் தெரு, கோமளீஸ்வரன்பேட்டை
சென்னை-600 002

# அளிக்கப்பட்ட பாராட்டுப் பட்டங்கள்

| வரிசை எண் | வருடம் | இடம் | பட்டம் பெயர் விபரம் | பட்டம் அளித்தவர்கள் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | 1951 | குடந்தை | திருக்குறளார் | உடையார்பாளையம் குறுநில மன்னர் "கச்சியுவரங்கக் காளாக்கத்தோழ உடையார் & ராஜா சிதம்பரம் ரெட்டியார் & தமிழ்ப் பேறிஞர்கள்-டாக்டர் மா. இராசமாணிக்கனார், சி. இராமலிங்கனார், நீதிபதி கே.எஸ். இராமசாமி சாஸ்திரியார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம். |
| 2 | 1954 | சேலம் | தமிழ் மறைக் காவலர் | சர். மி. டி. ராஜன் தலைமையில் பெரிய தமிழறிஞர்கள்& அறிஞர்கள்- டி.எம்.நாராயண சாமிப்பிள்ளை, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் மா.இராசமாணிக்கனார், சி.இலக்குவனார் வி. வி. ராமசாமி நாடார், தலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், காருகுறிச்சி அருணாசலம். |
| 3 | 1956 | ரிசிகேசம் | திருக்குறள் கேசரி | முனிவர் தவத்திரு சிவானந்த மகான் ரிசிகேசம், இமாலயமலை. |
| 4 | 1960 | ஈப்போ (மலேசியா) | குறள் காவலர் | தமிழ்ப் பேரறிஞர் குழாம், ஈப்போ மாநகர் |
| 5 | 1970 | திருச்சி | முப்பால் வித்தகர் | திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கம்- முன்னாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை தலைமையில் பேராசிரியர்கள் குழாம். |
| 6 | 1973 | சென்னை | கேடயம் | பெருந்தலைவர் காமராஜ் அவர்களால் வழங்கப்பட்டது. |
| 7 | 1979 | திருவண்ணா மலை | திருக்குறள் ரத்தினம் | கவியோகி சுத்தானந்த பாரதியர் தலைமையில் மகான் தவத்திரு யோகி ராமசுரட் குமார் சுவாமிஜீ, திருவண்ணாமலை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 1983 | சென்னை (தமிழ்நாடு அரசு) | திரு. வி. க. விருது & ரூபாய் பத்தாயிரம் | தமிழக அரசு—முன்னாள் தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் வள்ளுவர் கோட்டத்தில் வழங்கப் பட்டது. |
| 9 | 1984 | வேலூர் | நகைச்சுவை இமயம் | இலக்கிய மன்றம், வேலூர். |
| 10 | 1984 | சென்னை | முப்பால் மூதறிஞர் | திருவள்ளுவர் கழகம், மயிலாப்பூர், சென்னை - 4. |
| 11 | 1984 | சென்னை (தமிழக அரசு) | கலைமாமணி & தங்கப் பதக்கம் | தமிழக அரசு-முன்னாள் தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் கலைவாணர் அரங்கத்தில் வழங்கப் பட்டது. |
| 12 | 1984 | கடலூர் | திருக்குறள் திலகம் | திருக்குறள் கழகம், கடலூர். |
| 13 | 1984 | பாண்டிச்சேரி | திருக்குறள் தெய்வணி | அருள் மொழியரசு, குகஸ்ரீ, டாக்டர் திருமுருக கிருபானந்தவாரி சுவாமிகள். |
| 14 | 1986 | சென்னை | பொற்கிழி 1000/- | V. G. P. நிறுவனத்தாரின் சந்தனம்மாள் அறக்கட்டளை சார்பில் ரூ.1000/- பொற் கிழிஎண்ணூர் அதிசய உலக அரங்கில் நடந்த பாராட்டு விழாவில் அளிக்கப் பட்டது. |
| 15 | 1988 | சென்னை | குறள்நெறிச் செல்வர் | அருள்மிகு தெய்வச் சேழக்கிழார் அருள் நெறி மன்றம், பாடி, சென்னை—50 |
| 16 | 1988 | சென்னை | பொற்கிழி 1330/- | ஸ்ரீராம் குரூப் நிறுவனமும் திருக்குறள் பேரவையும் இணைந்து ஏ. வி. எம். ராசேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடந்த பாராட்டு விழாவில் பாண்டிச்சேரி பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியம் தலைமையில் வழங்கப்பட்டது. |



அச்சிட்டோர் :

மூவேந்தர் அச்சகம்,

29/2, சீனிவாசப் பெருமாள் சன்னதி தெரு,

இராயப்பேட்டை, சென்னை-14

தொலைபேசி : 867189